போதனு விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 NOV 1941
MADRAS

Editor & Publisher :

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

கோத்து 32 15 நவம்பர் 1941 மலர் 5

...னுமுறை பாடசாலை, திருச்சிராப்பள்ளி.

...1. தனிப்பிரதி அணு $1\frac{1}{4}$.

3L
N41.32.5
182456.

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	121
2.	வாழ்த்துப்பா	123
3.	சென்னை கல்வி இலாகா அறிக்கை	124
4.	அறநெறித்தொடர்	127
5.	கற்பனையும் கல்வியும்	128
6.	பாடக் குறிப்பு	131
7.	இதுவும் ஒரு நல்ல வழிதான்	133
8.	உங்களுக்குத் தெரியுமா?	135
9.	நமது சரடு	136
10.	கிராமக் கல்விப் பிரசாரம்	140
11.	ஆசிரியைகளின் கடமை...	143
12.	யோசனைக் கணக்கு	144
13.	வேம்பும் அதன் பயனும்	145
14.	சிறுவர் பகுதி	146
15.	யோசனைக் கணக்கு விடைகள்	147
16.	பெற்றோர் சங்க ஆண்டு விழாக்கள்	148
17.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	151
18.	பெற்றோர் சங்கக் கூட்டத்தில் ஓர் பாட்டு ...	152

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher:
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து **32**] **15** நவம்பர் **1941** [மலர் **5**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 NOV 1941
MADRAS

பத்திராதிபர் குறிப்புகள்

நமது பாடசாலை கல்விக் கண்காட்சி

(10–10–41 முதல் 14–10–41 வரை)

நாம் ஏற்கனவே தெரிவித்திருந்தபடி ஷை கண்காட்சி (Educational Exhibition) ஷை தேதிகளில் சிறப்பாய் வெற்றியுடன் நடைபெற்றது. அந்த வெற்றிக்குக் காரணமாக வெகு நேர்த்திவாய்ந்த காட்சிப்பொருட்களை யளித்துதவிய சகல மாணவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றி உரிமையாகும்.

இவ்வருஷம் நமது பழைய மாணவர்களும் காட்சிப் பொருட்களைப் பரிவுடன் அனுப்பியது குறிப்பிடத்தகும். விசேஷமாக, நம் பழைய மாணவர் திரு. S. மரிய தோமாஸ் அனுப்பிவைத்த, மானிடசரீரத்தின் உள்ளுறுப்புக்களை, அட்டை வேலை, ரப்பர் வேலைப்பாடுகளைக்கொண்டு, முழுப்பரிமாணம் தோன்ற, உள்ளவாறு அமைத்துக்காட்டிய **2** மாதிரி உருவங்**களும், (Models)** "நூல்நூற்கும் நூதனன்" எனும் கைவேலைப்பாடும் மிகவும் போற்றத்தக்கன. ஆனதுபற்றி அன்னவர்க்கும் ஏனையோர்க்கும் எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அவ்வண்ணம் நம் மாணவர்கள் இனி நடக்கவிருக்கும் கண்காட்சிகளுக்கு, புத்தி, யுக்தி பொருந்திய உபயோககரமான பொருட்களைத் தயாரித்து அனுப்புவார்களாக.

இச்சந்தர்ப்பத்தில் நம் பழைய மாணவர்கட்கு மற்றுமோர் விஷயத்தை நினைப்பூட்டுகின்றோம் :—நமது பாடசாலைப் பொருட்காட்சிசாலைக்கு (School-Museum) ஏற்ற, நவீன போதனா சாதனப் பொருட்களைத் தயாரித்து நன்கொடையாக அனுப்பித் தாய்ப்பாடசாலையின் அன்பிற்கும், எமது நன்றிக்கும் பாத்ரவான்களாக விளங்குவார்களாக.

அன்றியும் இவ்வருஷம் ஷை கண்காட்சிக்குக் காட்சிப் பொருட்கள் (Exhibits) தயாரித்தவர்களில் திறமைவாய்ந்த வேலைப்பாடமைந்த பொருட்களை வைத்தவர்களுக்கு, திறமைக்குத் தகுந்தபடி விசேஷ ஸர்ட்டிபிக்கேட்டுகள் (Certificates) வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

இந்த வருடத்திய ஷை கண்காட்சியின் சிறப்பைக் கீழ்வரும் விவரத்திலிருந்து உணரலாகும் :—கண்காட்சியைக் காண வந்த ஆண், பெண் பாடசாலைகளின் தொகை 40. அவற்றுள் போதனா முறைப் பாடசாலைகள் மாத்திரம் 4. சுமார் 120 ஆசிரியர்களும், 3,500 மாணுக்கர்களும் வரிசைக்கிரமமாக வந்து பார்வையிட்டனர். இவர்களைத்தவிர, நூற்றுக்கணக்கான மாணவர்கள், மாணவிகள் தனித்தனியாய் வந்து கண்ணுற்றுள்ளனர். மேலும், எமது கண்காட்சி ரேஜிஸ்டரில் கையொப்பமிட்ட 990 சீமான்கள் சீமாட்டிகள் ப்ரத்தியேகம்.

காட்சிப் பொருட்களின் வகை, தொகை, வரிசைகளைக் காண்போர் எளிதில் கண்டுகளிக்குமாறு ஆங்காங்கு ஆசிரியர்களும் மாணவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த விமரிசையால், பார்க்க வந்தவர்களில் பலர் இதைப்போல் வருஷாவருஷம் கண்காட்சி நடத்தும்படி எம்மைக் கேட்டுக்கொண்டனர்.

ஆயினும், நம் பாடசாலையில் பயிலும் ஆசிரிய மாணவர்கள் தத்தம் திறமைகளைக் காட்ட தக்கதோர் சந்தர்ப்பம் அளிப்பதே எங்கள் முக்கிய நோக்கமாதலின் அதற்கேற்ப இரண்டு வருஷங்களுக்கொருமுறையாக கண்காட்சி நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இறுதியாக, ஷை கண்காட்சி அனைவர்க்கும் பயன்படுமாறு வெற்றிகரமாய் முடிந்தமைக்குக் காரணமாய் இருந்த சகல மாணவர்கட்கும், அதனைக் கண்ணுற்றுக் களித்த எல்லா சீமாட்டிகள், சீமான்களுக்கும் எமது வந்தனத்தைச் செலுத்துகின்றனம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் நூலகம்
182456
சென்னை-600 008

வாழ்த்துப்பா

"எம். ஜி. ஜே."

திரிலோக மாளுந்தேவன் தீதிலா நம்மைக் காக்கச் சீரிய திருச்சபையைச் செவ்வனே நாட்டியுள்ள உரோமை மாநகருக்கொப்ப ஒரு திருப்பதியுமுண்டு, அதன்பெயர் திருச்சி. அப்பதிக்கு அழகுசெய்யும் ஆழ்புனற் காவிரியும் அந்தணர் குடும்பம் போற்றும் காந்திசூழாலயமும் புள்ளினம் பாடும் கீதம் புனைந்திடும் பூஞ்சோலைகளும், புனல்வளம் படிந்து ஓடப் பொற்கதிற் பொதிப்பைங்கூழும் நிரம்பப் பெருகிய நீரும் வாய்க்கால் வழியிலே புறண்டு ஓடவப் போக்கினை நோக்கா நிற்கும் பூமகள் மைந்தர் யாவும்; நற்போதகமே புகட்டிப் புத்தியின் இருளை நீக்க நற்போதனுமுறைகள்யாவும் பயன்பெற மக்கட்கீட்டும் படிப்பைப் போதனுசாலையொன்றும் மிளிர்ந்திடுமிப்பதி யகத்தே. தலைவராமச் சாலைக்காவர் சங். லூர்துசுவாமி; சற்குணக்குருவுமாவர் வன்கலைவாரிக் கொட்டும் வாஞ்சைசேர் தந்தையாவர்; சேசுமரிசூசை வாழ்நாள் சிறப்புற்றிலங்குமாப்போல் இப்பதி என்றும் வாழ்க! எங்கும் படிப்பின்மை வீழ்க! பொங்குபல் புகழும் ஓங்க!

நீதிபதி :—பொய் சொன்னல் என்ன நேரும்? தெரியுமா?

குற்றவாளி :—தெரியும். நரகத்திற்குப் போகவேண்டும்.

நீதிபதி :—நிஜத்தைச் சொன்னல்?

குற்றவாளி :—ஜெயில்.

VIII வகுப்பு முடிவில் ஸர்க்கார் பரீட்சை ஏப்ரல் **1942.** (Public Examination at the end of VIII Standard. April 1942.)

ப்ரைவேட் மாணவர்கள் மனு போடுவதற்கு நோட்டீஸ். (Notice inviting applications for admission—Private Candidates.)

(Page 789. Fort St. George Gazette dated Oct. 21, '41)

VIII வகுப்பு முடிவில் ஸர்க்கார் பரீட்சை முதல் தடவையாக 1942, ஏப்ரல்-மீ 2-வது வாரத்தில் நடைபெறும். அதற்கு ப்ரைவேட் மாணவர்கள் மனுக்களை (Applications) பின் வருவதைக் கவனித்து, அனுப்பி பரீட்சை எழுதலாம்:—

பரீட்சை எழுத லாயக்குள்ளவர்கள். VIII வகுப்பு தேறியதாக கல்வி இலாகா அதிகாரிகளால் அளிக்கப்பட்ட E. S. L. C. ஸர்ட்டிபிக்கேட் பெற்றுள்ளவர்கள், ப்ரைவேட் மாணுக்கர்களாக ஷை ஸர்க்கார் பரீட்சை எழுத லாயக்குள்ளவராவர்.

பரீட்சை எழுத லாயக்கற்றவர்கள். டெப்யூடி இன்ஸ்பெக்டர் அல்லது ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் (பெண்கள்மட்டில்) இவர்களால் நடத்தப்பட்ட VIII வகுப்பு முடிவு பரீட்சையில் ஏற்கனவே தேறாதவர்கள் 'ப்ரைவேட்' மாணவர்களாக ஷை ஸர்க்கார் பரீட்சை எழுத லாயக்கற்றவர்களாவர் என்பதை யறியவும்.

அவ்வாறே ஸெக்கண்டரி பாடசாலை III பாரத்திலிருந்தோ IV, V பாரங்களிலிருந்தோ மேல் வகுப்புக்கு மாற்றிய டிரான்ஸ்பர் ஸர்ட்டிபிக்கேட் (Transfer certificate) பெற்றிருப்பவர்கள்கூட ஷை பரீட்சையை ப்ரைவேட் மாணுக்கர்களாக எழுத லாயக்கற்றவராகின்றனர்.

மேற்கூறியபடியே, மைசூர் லோவர் ஸெக்கண்டரி பரீட்சை (Mysore Lower Secondary Examination) எழுதித் தேறினவர்களும் ஷை பரீட்சையை ப்ரைவேட் மாணவர்களாக எழுத லாயக்கற்றவர்களே.

* * *

ஆனால் VIII-வது வகுப்பில் படித்து, பள்ளிக்கூடப் பரீட்சை தேறி, E.S.L.C. ஸர்ட்டிபிக்கேட் பெற்றிருக்கும் ஒரு மாணவன், மேலே கூறிய ஸர்க்கார் ஸர்ட்டிபிக்கேட் பெற விரும்பினால், அவன் மீண்டும், ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து, அதில் இடமிருந்தால், அத்தலைமையாசிரியர் அனுமதியின்பேரில் VIII-வது வகுப்பில் படித்து ப்ரைவேட் மாணுக்கனாக பரீட்சை எழுதலாம்.

ஆனல் "ப்ரைவேட்" மாணுக்கன் என்ற தனி முறையல்லாமல் ஏனைய பிள்ளைகள்போல் தானும் ஒரு வகுப்பு மாணவனுக, பரீட்சை எழுத விரும்பினல், மற்றவர்களைப்போல் **ஆஜர் நாட்களை** சரியாய்ப் பெறவேண்டும். அப்படிப் பெறக்கூடாமைக்கு கல்வி அதிகாரிகளிடமிருந்து விசேஷ அனுமதி பெற்ற பின் பரீட்சை எழுதலாம்.

* * *

பாடங்கள் முதலியன :—கீழ்வரும் பாடங்களில் பரீட்சை எழுதவேண்டும் :—(1) பாஷை, (2) ஆரம்ப கணிதம், (3) சரித்திரம், பூகோளம், அரசியல் நூல்.

VI-வது வகுப்பு முதல் VIII-வது வகுப்பு முடிய படிக்க வேண்டிய பாடத்திட்டத்திலுள்ள பாடங்களில் பரீட்சையுண்டு. பூகோளப்பாடம் திருத்தப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். ஆயினும், அப்பாடத்தில் கேள்விகள், பழையத் திட்டப்படியும், புதுத்திட்டப்படியும் போடப்படும்.

ஷை பரீட்சை எழுதுவதற்கு கட்டணம் ரூ. 1–8–0. அப்ளிகேஷன் பாரங்களை அந்தந்த ரேஞ்சு டெப்யூடி இன்ஸ்பெக்டரிடமிருந்தாவது, பெண்களானல், ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் (Sub-Assistant Inspectress, Girls' Schools) இடமிருந்தாவது பெற்றுக்கொள்ளலாம்.

ஷை பரீட்சைக்கு மனுக்களை (அப்ளிகேஷன்—Applications) **1941**-ம் ௵ நவம்பர்-மீ **30**-ம் தேதிக்குள் ரோய் கமிஷனருக்கு அனுப்பிவிடவேண்டும். அதாவது பின்வருமாறு விலாசம் எழுதவேண்டும் :—

To, The Secretary to the Commissioner for
Government Examinations,
Cathedral Post, Madras.

* * *

கல்வி டைரேக்டரது சுற்றறிக்கை

Proceedings of the Director of Public Instruction, Madras. R. O. C. No. 3546 B/40 dated 10–10–1941.

ஆரம்பப் பாடசாலைகளில், கைப்பழக்க முன்னணிப் பாடங்களும் (Prevocational subjects) அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் (Instructors) யோக்கியதாம்சமும், சம்பளமும் :—

ஆரம்பப் பாடசாலைகளில் புதுத்திட்டப்படி ஷை பாடங்களைக் கற்றுக்கொடுக்கும் தொழில் ஆசிரியர்களின் யோக்யதாம்

சம் இன்னின்னதென்று ஷை சுற்றறிக்கையின் **அநுபந்தத்தில் டைரெக்டரால்** கூறப்பட்டிருக்கிறது. அந்த யோக்யதாம்சங்களை (Technical-qualifications) அவர்கள் பெற்றிருப்பார்களானால் பழைய உத்திரவின்படி அதாவது G. O. No. 2463, dated 16-11-36-ஐ ஒட்டிய 533-ம் ரெ. G. O. (5-4-'41)-ல் கூறியுள்ளபடி பொதுப்படிப்புத் தேர்ச்சி (General-Educational qualification) தேவை இல்லை. அதாவது உயர் படிப்பு அவசியமில்லை. இவர்களுக்கு ஹையர் எலிமெண்டரி கிரேடு பயின்ற ஆசிரியர்கட்கு எப்படி சம்பளமோ அல்லது அஸ்ஸெஸ்ட் கிராண்டோ (Assessed Grant) கொடுக்கப்படுமோ, அவ்வாறே இவர்களுக்கும் அளிக்கப்படும்.

மேற்கூறிய அனுபந்தத்தில் கண்டிருக்கும் யோக்யதாம்சங்கள் (Technical qualifications) பெற்றுள்ள ஆசிரியர்கள் கிடைக்காவிடில், வேறு கீழ்வரும் ஆசிரியர்களை மானேஜர்கள் வேலைக்கு அமர்த்தலாம்:—அதாவது அவர்கள் தங்கள் தொழில் தேர்ச்சியுடன் 16-11-'36/2463 G. O.-ல் சொல்லியிருக்கிற பொதுப்படிப்பு (General Educational qualification) படித்துத் தேர்ந்திருக்கவேண்டும். இத்தகையவர்களுக்குச் சம்பளம் போர்டுகளில் ஹையர் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட ஸ்கேலில் கடைசி ஸ்கேல் கொடுக்கப்படும். ஆனால் எயிடெட் பாடசாலைகளில் இவர்களுக்கு கிராண்டு வருஷத்தில் ரூ. 108-க்கு அஸ்ஸெஸ்டு செய்து கொடுக்கப்படும்.

அன்றியும் மானேஜ்மெண்டு பாடசாலைகளில் (போர்டு அல்லது எயிடெட்) அரை வேலைக்கு (Part time) தொழிலாளி ஆசிரியர்களை (Artisans or instructors) நியமிக்கலாம். இவர்களுக்கு வருஷத்தில் ரூ. 100 வீதம் சம்பளம் தரலாம். ஆனால் இவர்களுக்குப் பொதுப்படிப்பில் தேர்ச்சி கட்டாயமில்லை. கற்றுக்கொடுக்கும் தொழில்களில்மாத்திரம் போதுமான திறமை நேர்மைகள் இருத்தல் அவசியமாகும்.

* * *

குறிப்பு:—மேற்கூறிய அநுபந்தத்தில் என்னென்ன யோக்யதாம்சங்கள் ஷை தொழில் ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும் எனக்கூறியிருக்கிறதென்பதை இங்கு பிரசுரிக்க இடமில்லை. ஆகவே இஷ்டமுள்ளவர்கள் அந்த அநுபந்த விவரத்தை ஷை சுற்றறிக்கையின் மூலத்திலிருந்து (அசலிலிருந்து - Original) தெரிந்துகொள்ளவும்.

அறநெறித்தொடர்

(M. A. S. Udayar)

(கொத்து 32, மலர் 4, 93-ம் பக்கத் தொடர்ச்சி.)

இலார் குறைபேசேல்
நலிவது தவிர்
கலீரெனப் பேசு
உலுத்தரைச் சேரேல்
உலூர்தனையைப் பணி
நாலெழுத்துணர்
நூலேய்ந்தொழுகு
காலைத்துயிலெழு
பாலொத்துரை
மேலோனெனப்படு
இலௌகிகங்கல்
பழமொழிகல்
விழாவினைப்போற்று
பழியகன்றொழுகு
தழீப்பிறர்ப்போற்று
தொழுதாலயஞ்சேர்
குழுக்கொளவிரும்பு
ஏழெனும்பவந்துடை
யாழேய்த்துரை
விழைவதொழுக்கம்
காழொப்பச்சொல்
கீழோர்ப்பேண்
அளந்தறிந்துரை
வாளாவதியேல்
எளியார்க்கிறங்கு
சுளீரெனச்சொல்லேல்
தளுக்கித்திரியேல்
வாளுடேகேல்
கேளெனக்கிட
வாளேற்றுத்திரியேல்
களைகணாய்நில்
கோளொன்றுங்கூறேல்
உளோனெனுமுறைபெறு
அறநெறியோம்பு
உறார்க்குஊறிழையேல்
அறிஞர்க்கடங்கு
கறுவொடுகழறேல்
சாறென்றும்விழை
ஊறேதுஞ்செயேல்
நிறையழிந்துழலேல்
பேறொன்றுமிழவேல்
பெற்றோர்ப்பேண்
மனந்தடுமாறேல்
வினாவித்தெளி
நணிபிழையகற்று
மேனீர்மைவிழை
மனுமகனைத்தொழு
வானூர்மதியேய்
நானெனுங்குணமொழி
வானேய்வழிச்செல்
மனையறம்புற
கோணொடுகோடேல்
வினோதம் விரும்பேல்

162. நலிவது=பிறரை வருத்துவது. 164. உலுத்தர்=மிலேச்சத்தன்மையுடையோர். 177. குழுக்கொள=நல்லோர் கூட்டத்திற் சேர்ந்துகொள்ள. 178. ஏழெனும்பவம்=ஆங்காரம், கோபம், மோகம், உலோபித்தனம், காய்மகாரம், சோம்பல், போசனப்பிரியம். 180. விழைவது=விரும்பப்படுவது. 181. காழ்=வயிரம். 191. களைகணாய்=பிறரிடர் தீர்ப்போராய். 198. சாறு=விழா. 199. ஊறு=இடையூறு. 200. நிறை=ஒழுக்கம்.

கற்பனையும் கல்வியும்

[P. G. S. Aiyar B.A., L.T.].

பிரபல நாதஸ்வரக்காரர் மோஹன ராகத்தின் கம்பீர சௌந்தர்யத்தை அபூர்வமாகப் பொழிகிறார். சுற்றியிருப்பவர்கள் மெய்மறந்து இருக்கின்றனர். புதிய புதிய கற்பனைகளைப் புகுத்தி இசை இன்பத்தைப் பரிமளிக்கச் செய்கின்றார் வித்வான். "என்ன கற்பனை!" "என்ன கற்பனை"! என்று அலமலருகிறார் ஒரு வயதான கிழவர். "கொன்னுட்டான் ஸார்" என்று பக்கத்திலிருப்பவரின் தோளைத்தட்டித் தன்னுடன் ரஸானுபவத்தில் பங்கிட்டுக்கொள்ளும்படி வருந்தி அழைக்கின்றார் மற்றொருவர். அவர் ஒரு ஆசிரியர். சாரமற்ற அவரது வாழ்க்கையில் இது ஒரு அரிய சந்தர்ப்பம் அல்லவா? தன் சந்தோஷத்தை மற்றவருடன் பகிர்ந்து உண்ணுவதில் ஒரு தனி உற்சாகம் உண்டு. நாதஸ்வரக்காரரின் கற்பனை அவரைக் கவர்ந்ததில் வியப்பென்ன? பாமரர் உள்பட யாவருமே தன்னை மறந்தல்லவோ நின்றனர்! பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒரு வித்வானின் கற்பனசக்தியை வியந்து ஆர்ப்பரிப்பது எள்ளளவும் அதிசயிக்கத்தக்கதல்லவே. அவரும் அடிநாளில் போதனமுறைப் பாடசாலையில் பயின்றகாலத்தில் கற்பனைத் திறனை விருத்திசெய்வதின் அவசியத்தைப்பற்றியும் எந்தப் பாடங்கள்மூலம் அதனை ஓங்கிவளரச் செய்ய முடியுமென்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கேட்டிருக்கிறார். ஆனால் இவராவது அல்லது மற்ற எந்த ஆசிரியராவது மாணவர்களின் கற்பனசக்தியை வெளிப்படுத்தி அபிவிருத்திசெய்ய நடைமுறையில் எவ்வித முயற்சியாவது எடுத்துக் கொண்டிருக்கிறார்களா? போதனமுறை தத்வங்களைக் கையாளுவதே பாவம். அத்தத்வங்களெல்லாம் படித்தபொழுது சரியானவைதான், ஆனால் நடைமுறையில் சாத்யமாகாதென்று ஒரு தலைத்தீர்ப்பு அளித்துவிடுகிறார்கள். அம்முறைகளை அனுபவவாயிலாகப் பரீக்ஷித்துப் பார்த்தீர்களா? சாத்தியப்படவில்லையா என்று அவர்களைக் கேட்காதீர்கள். வழக்கில் பின்பற்றக்கூடியவையல்ல என்று அவர்கள் உள்ளுணர்வுதான் அடித்துக்கொள்கிறதே.

இத்தகைய உள்ளுணர்வுக்காரர்களுக்கு யோசனை சொல்ல நான் முற்படவில்லை. போதனமுறைத் தத்துவங்களை எடுத்துக் காட்டி அவைகளின்மூலம் கற்பன சக்தியின் அவசியத்தை வற்புறுத்தவும் போவதில்லை. சிறிதளவு முயற்சி எடுத்து மாணவர்

களிடம் காணப்படும் கற்பனைத்திறனை வெளிப்படுத்த முடியு மென்பதே என் கக்ஷி.

எவ்விதம் அலட்சியம் செய்யப்பட்டும் ஆதரவற்றும் நின்ற போதிலும் கற்பனைத்திறன் தமிழ் நாட்டில் அற்றுப்போகவில்லை. அதற்கு நமது கர்நாடக சங்கீதமே சிறந்த சான்றாகும். பழைய ராகங்களையும் பழைய கீர்த்தனங்களையுந்தான் அதிகமாகக் கேட்கின்றோம். எனினும் அவை புதியவழிகளில் பாடப்பட்டு நமது மனதைக் கொள்ளைகொள்கின்றன. படித்தவர்முதல் பாமரர்வரை அதன் போதையில் அமிழ்கின்றனர்.

மனதை நல்ல வழியில் திருப்புவதற்கும் அவ்வழியைப் பின் பற்றி ஒழுகுவதற்கும் பயிற்சி வேண்டுமென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. கற்பனைத் திறனுக்கும் அவ்விதப் பயிற்சி அவசியமென்பது என் துணிபு, பயிற்சியினால் கவிகளையும் கலைஞனையும் சிருஷ்டித்து விடமுடியுமா என்ற கேள்வி பிறக்கலாம். பயிற்சியின்றியே சிறந்த கலைஞனோ கவியோ ஏற்பட்டுவிட முடியுமா என்பதுதான் என் பதில். இயற்கையிலேயே கற்பனைத் திறனை உடைய குழந்தைக்கும் பயிற்சியும் படிப்பும் அவசியமில்லையா? இயற்கையில் காணப்படும் குணவிசேஷங்களைப் பயிற்சியும் உழைப்பும் அன்றோ வெளிப்படுத்தி சோபிக்கச் செய்கின்றன. அபார சாதகத்தினால் முன்னுக்குவந்த வித்வான்களைப் பார்த்ததில்லையா?.

கற்பனா சக்தியை ஓரளவு பயிற்சியினால் விருத்திசெய்ய முடியுமென்பது என் துணிபு. கற்பனா சக்தியை வெளிப் படுத்த என்னென்ன பாடங்களைக் கற்பிக்கவேண்டும் என்ற ஜாப்தாவை எழுதி உங்கள் நேரத்தை வீணாக்கப்போவதில்லை. எவ் விதம் மாணவர்களுக்குத் தங்கள் கற்பனைத் திறனை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் அளிக்கலாமென்பதற்குச் சில உதாரணங்களைத் தந்துள்ளேன்.

1. சங்கீதப்பயிற்சி.

2. கதைசொல்லுதல்: (*a*) மாணவர்கள் சுயமாக இட்டுக் கட்டிய கதைகளை வகுப்பிற்கு எடுத்துச்சொல்லவேண்டும். குற்றம் குறைகளை மற்ற மாணவர்கள் எடுத்துக்காட்டுவார்கள். (*b*) கதைகளின் முடிவைத்திருத்தி வேறுவிதமாகத் திருத்தியமைக்கச் சொல்லுதல். ஒவ்வொரு மாணவனும் வெவ்வேறு விதமான முடிவுகளைக் கற்பனைசெய்யலாம்.

3. பிரயாணங்களைப்பற்றிய வர்ணனைகளைக் கூறச்சொல்லுதல். இதில் மாணவர்கள் தங்கள் மனம்போனபடி வர்ணிக்கத்

தலைப்படுவார்கள். இயற்கைக்கு விரோதமானவற்றைத் தள்ளி மற்ற பகுதியை ஏற்றுக்கொள்வதே நலம்.

4. கடிதங்கள் எழுதுதல்: நம்தேசத்தை அல்லது நகரத்தைப்பற்றி அயல்நாட்டு சிநேகிதனுக்கு எழுதுகிற தோரணையில் அமையவேண்டும்.

5. படங்களிலிருந்து கதைப்போக்கை நிர்மாணித்தல்.

6. பாடத்தில் காணப்படும் கதைகளை நாடகங்களாக அமைத்து நடித்தல்.

வியாசப்பாடங்கள் கொடுக்கும்பொழுது அதிக கவனம் செலுத்திக் கற்பனைத்திறனை வளர்க்க முயலவேண்டும். இவைகள் சில உதாரணங்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆசிரியர்கள் தங்கள் பாரம்பர்ய பிதுரார்ஜ்ஜிதமான தரித்திரத்தை மறந்து, சிக்கனத்தைவிட்டு கற்பனு சக்தியை உபயோகித்துப் புதிய அப்பியாசங்களை நிர்மாணித்து வகுப்புகளில் கையாளவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

சத்திய போதினி

மாதிரி பிரதி இனும்

நானுவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப் பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	... ரூ.	1—0—0
வெளி நாடு	... ரூ.	1—6—0

விலாசம்:

சூப்பெரின்டென்டெண்டு,
செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சினுப்பள்ளி.

பாடக் குறிப்பு

பாடம் : பொது அறிவு. வகுப்பு : III. நேரம் : 35 நி.

நோக்கம் : சந்தை அல்லது மார்க்கெட் (Market)—அங்கு விற்பனை நடைபெறும் விதம்—என்பதை அறிவித்தல்.

முன்னறிவு : பட்டணங்களில், பிள்ளைகள் தினசரி காய்கறி மார்க்கெட்டைப் பார்த்திருத்தல். கிராமங்களில், வாராவாரம் குறிப்பிட்ட ஒரு நாளில் சந்தை கூடுவதைப் பார்த்திருத்தல்.

பீடிகை : தினசரி போஜனத்தில் உபயோகிக்கப்படும் உணவுப்பொருட்கள், காய்கறி பழங்கள் முதலியவற்றைப்பற்றிச் சிறிதுநேரம் சம்பாஷணை. பின்னர் அவற்றின் விற்பனையாகுமிடம், விதம், முதலியவற்றைப்பற்றி விவரிப்பதாகக் கூறவும்.

விஷயமும் முறையும் : சந்தை அல்லது மார்க்கெட்டிலுள்ள பொருள்கள் வகை வகையாக, வரிசை செய்யப்பட்டிருக்கின்றன. (1) தானியக் கடைகள் (அரிசி, சோளம், கம்பு முதலியன). (2) பலசரக்குக் கடைகள் (உப்பு, புளி, மிளகாய், மசாலை சாமான் முதலியன). (3) காய்கறிகள்—வெற்றிலை, தேங்காய், வாழைப்பழம் மற்ற பலவித பழதினுசுகள். (4) மீன், இறைச்சி. (5) பலகாரம், பட்சணம், தின்பண்டங்கள். (6) சட்டி, பானை முதலிய தட்டுமுட்டு சாமான்கள். (7) விளையாட்டுச் சாமான்கள். (8) சட்டை, துணிமணிகள் முதலியன.

குறிப்பு :—பிள்ளைகளின் முன்னறிவுடன் சம்பந்தப்படுத்திக் கூறியும், க-ப-வில் சுருக்கமாய் எழுதியும் விளக்குக.

ஷை பொருள்கள் விற்பனைசெய்யப்படும் விதம் :

(1) தானிய வகைகள் முகத்தலளவைக்கொண்டு (படி, ஆழாக்கு) விலை கூறி விற்பனை. (2) பலசரக்குகள் (சில முகத்தல், சில நிறுத்தல்—திராசு படிக்கல்—பலம், சேர், வீசை). (3) காய்கறிகள் : சில எண்ணிக்கை, சில நிறுத்தல் மூலமாய் விலை பேசப்படும்.—வெற்றிலை—கவுளி (100), பழம்–அணுவுக்கு எத்தனை—சில பழங்கள் டஜன் என்ன விலை—தேங்காய் ஒன்று என்ன விலை. ஷை 5, 6, 7, 8 முதலியன உருப்படிகளின்பேரில் விலை.

குறிப்பு :—ஷை அளவைகளைப்பற்றியும், எண்ணிக்கைகளைப்பற்றியும் அந்தந்த பொருள்களுக்குத் தக்கபடி விற்பனையாவதையும் ஞாபகப்படுத்துக. முகத்தல் அளவைகளையும், நிறுத்தல் கற்களையும் காட்டலாம்.

அப்பியாஸம் :

1. சந்தை அல்லது மார்க்கெட்டில் பண்டங்கள் வகை வகையாகப் பிரித்துவைத்திருப்பது எதற்காக ?

2. அரிசி, பருப்பு, சோளம், மிளகாய், உப்பு, கடுகு, பூண்டு, மஞ்சள் இவை ஒவ்வொன்றையும் வாங்கும் விதம் (எந்த அளவை) யாது ? எப்படி விலை கேட்பாய் ?

3. வாழைக்காய், கத்தரிக்காய், புடலங்காய், பூசணிக்காய், பச்சைமிளகாய் Etc, Etc ஒவ்வொன்றையும் எப்படி விலை கேட்பாய் ? எந்த அளவில் வாங்குவது ?

4. வாழைப்பழம் ஒன்று என்ன விலை ? அணுவுக்கு எத்தனை பழங்கள் ? இக்கேள்விகளில் எக்கேள்வியைப் போடுவாய் ? ஏன் ?

5. தின்பண்டங்களில் எவை புதிது, எவை பழையன, எவை சுத்தமானவை என்று கண்டுபிடிக்கத் தெரியுமா ? ஏன் ?

6. நீ மறுபடி சந்தை அல்லது மார்க்கெட் போகும்போது இந்த பாடத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவாயா ? ஏன் ?

குறிப்பு :—இப்பாடத்தின் முக்கியம் விளங்கவேண்டுமானால் ஆசிரியர் பிள்ளைகளைச் சந்தைக்கு அல்லது மார்க்கெட்டுக்கு நேரே அழைத்துச்சென்று மேலே கூறிய சில அம்சங்களையாவது கவனிக்கும்படி செய்யத்தகும். அன்றியும் மேலே கூறியிருப்பது ஒரு சிறு பகுதியே. ஆசிரியர் இடம், ப்ரதேசம், வழக்கம் முதலியவற்றிற்குத் தக்கபடி பாடத்தை அமைத்துப் போதிப்பதே முறையாகும்.

உன்னைப்பற்றி அவன் பொய்யும், புழுகும் சொல்லிக்கொண்டு திரிகிறானே, அவனைக் கண்டிக்கக்கூடாதா ?

அதனால் பரவாயில்லை. அவன் என்னைப்பற்றி உள்ளதைச் சொன்னால்தான் கண்டிக்கவேண்டும்.

Mariajoseph.

இதுவும் ஒரு நல்ல வழிதான்!

"இதென்னசார்! தர்மசங்கடம். புதியமுறை, புதியமுறை என்ற பல்லவியே பாடுகிறார்கள் இந்தக் கல்வி இலாக்கா அதிகாரிகள். நாமெல்லாம் கர்நாடக முறையிலே போதனமுறை பயின்றவர்களாச்சே, புதியமுறையிலே பாடத்தைக் கற்பிக்கணும்னா என்னபண்றதுன்னே"......என்று சற்று ஆத்திரமாகப் பேசினார் ராமய்யர்.

"அப்படிச் சொல்லாதீங்கோ சார்! இந்த புதியமுறைப்படி பாடம் கற்பிப்பது மிகவும் பிரயோசனத்தைக் கொடுக்கக்கூடியதுதான். பிள்ளைகளும் அதிக ஆவலுடனும் கவனத்துடனும் கல்வி பயில ஏற்றமுறைகள் உண்டு" என்றேன் நான்.

"நல்ல முறைதான் சார்: அதையார் இல்லையென்று சொன்னா? ஆனல் குறவனை பிடித்து ராஜமுழி முழிக்கச்சொன்னாப்போலிருக்கிறதே? இந்த நவீன போதனமுறை நமக்கெப்படிசார் தெரியும்?" என்று சற்று குத்தலாகக் கேட்டார் சுந்தரமய்யர்.

அதைச் சொல்லவேண்டுமா? அதற்குத்தான் ஒரு உபாயம் செய்துவருகிறேன். அதன் பலனைக் கண்கூடாகப் பரீக்ஷித்தும் விட்டேன். சென்றவாரம் என் பள்ளிக்கூடத்தைப் பரீக்ஷித்த இன்ஸ்பெக்டர்கூட..........

"ஓஹோ! உங்கள் பள்ளிக்கூடம் பரீக்ஷை செய்யப்பட்டு விட்டதா? என்ன, திருப்திகரமாய் எழுதியிருக்கிறாரா?"

"ஆஹா! மிகவும் நன்ராய் பரிக்ஷை முடிவுபெற்றது. "என்னசார்! இந்த தாலுக்காவில் உள்ள பள்ளிக்கூடங்களைவிட உங்கள் பள்ளிக்கூடம் எனக்கு மிகவும் திருப்திகரத்தைக் கொடுத்திருக்கிறது. நவீன போதனமுறையின்படி சரிவரப் பாடம் நடத்தப்பட்டுவருகிறது. இந்தப் பட்டியில், இவ்வளவு முன்னேற்றமான முறையில் இருக்கும் உங்கள் பள்ளிக்கூடத்தைப் பார்க்கவும், உண்மையிலேயே எனக்கு அதிக சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் கொடுத்திருக்கிறது" என்று கூறியுள்ளார்.

"எங்கள் பள்ளிக்கூடத்தைவிட, உங்கள் பள்ளிக்கூடம் மிகவும் முன்னேற்றமான முறையில் நடத்தப்பட்டு வருகிறதாகக் கேள்வி. இதன் காரணமென்ன" என்றார் ராமய்யர்.

"இதெல்லாம் எனது ஆப்த நண்பரது உதவியினுல்தான் சார்."

"ஆஹா! அப்படிப்பட்ட நண்பர் யார் இருக்கிறது, இதென்னய்யா மர்மம்."

இதோ, நான் கையில் வைத்திருக்கிறேனே, அவர்தான் எனது நண்பர் என்றேன். உடனே எல்லோரும் ஆவலுடன் அதை வாங்கிப் பார்த்தனர். அந்த நண்பர் யார்? அவர்தான் "போதனு விஷயப் பூங்கொத்து."

"அடடா! அருமையான விஷயங்கள், போதனு உபாயங்கள் அடங்கிய அழகிய சஞ்சிகையாயிருக்கிறதே" என்று ஆவலுடன் கேட்டனர்.

ஆமாம்! இது திருச்சியில் R. C. போதனுமுறைப் பள்ளியினின்று வெளியாகும் ஒரு மாதாந்திர சஞ்சிகை, இதில் பல போதனு விஷய உண்மைகளும் உபாயங்களும் அடங்கியுளது. ஆசிரியர்கட்கு உற்ற தோழனுயிருந்து, நவீன போதனுமுறைப்படி எப்படி கல்வி பயிற்றுவதென்பதைத் தெளிவாய் விளக்கிக் காட்டுவதோடு, ஆசிரியர்களுக்கு உண்மையிலேயே ஒரு நல்ல வழிகாட்டியாயிருக்கிறது. இதன் உதவியால்தான் எனது பள்ளிக்கூடம் முன்னேற்றமான முறையில் நடத்தப்படுகிறது. என்று ஒரு சிறு உபந்நியாசம் செய்தேன்.

ஆமாங்கசார்! இதுவும் ஒரு நல்லவழிதான். நவீன போதனு உண்மைகளையும், உபாயங்களையும் தெள்ளிதில் விளக்கிக் காட்டக்கூடிய இந்த அரிய பத்திரிகையை நாம் ஆதரிக்கவேண்டும். இன்றே சந்தாதாராகச் சேருங்கள். இதுவே நமது இன்றைய உபாத்திமை சங்கத்தின் தீர்மானமாயிருக்கட்டும் என்று சுந்தரமய்யர் சொல்ல, எல்லோரும் மகிழ்ச்சியுடன் அதை ஆமோதித்தனர்.

அன்பார்ந்த சந்தாதார்களே! வாசகர்களே! என்னைப் போல் நீங்களுமேன் செய்யக்கூடாது? குணமும் மணமும் நிறைந்த மாதாந்திர சஞ்சிகையாம் போதனுவிஷயப் பூங்கொத்தின் மேன்மையைத் தமிழ்நாட்டு ஆசிரியர்களுக்கு ஏன் பிரசித்தப்படுத்தக்கூடாது?

யேசுவின்தாசன்.

1. நிறை இருளில் வெளவால் எப்படி பறக்கமுடியும்?

நிறை இருளில் வெளவால்கள் பறக்க இயலும். இதற்கு அவைகளுடைய இறகுகளிலுள்ள நரம்புத் தொகுதியின் மென்மையான நுண்ணிய அமைப்பே காரணமாகும். இறகு களின்மேலுள்ள மெல்லிய தோலானது மிகவும் நேர்த்தியான மயிர்களால் நிரம்பப் பெற்றது. இவை சுற்றுப்புறப் பொருள் களிலிருந்து அசையும் காற்றின் அலைகளை அறியக் கூடியவாறு மிகவும் உணர்ச்சி யுடையதாயிருக்கின்றன. பல பரிசோதனைகள் செய்து பார்த்ததில் வெளவால் குருடாகவே யிருந்தபோதிலும், இருளில் மிக இலகுவாக பறப்பது மன்றி, பறக்கும் வழியில் கயிறோ கம்பிகளோ இருந்தபோதிலும், அவைகளில் மோதிக் கொள்ளாமல் பறக்கவும்கூடும். வெளவால்கள் பறவைகளல்ல. ஆனால் அவைகள் பறக்குந்தன்மைவாய்ந்த குட்டி போட்டுப் பால் கொடுத்து வளர்க்கும் ஓர் அபூர்வ இனமாகக் கருதப் படுகிறது. அவைகளின் இறகுகள் மிகவும் மெல்லிய காகிதம் போன்ற ஜவ்வே (Membrane) ஆகும். இது இவைகளின் உடல், முன்னங்கால், நீண்ட விரல்கள் இவைகளைச் சுற்றியும் பரவி யிருக்கிறது. இந்த ஜவ்வு (Membrane) தான் வெளவாலின் அபூர்வ சக்திக்குக் காரணமாம்.

2. பூனைகள் இருளில் பார்ப்பதெப்படி?

பூனைகள் நிறை இருளில் பார்க்க முடியாவிடினும் மற்ற பிரா ணிகளைக் காட்டிலும் அதிக இருளில் பார்க்கக்கூடும். பூனையின் கண்கள் குறிப்பிடத்தக்கவை. எவ்வாறெனில் அதன்கருவிழியின் மத்தியிலுள்ள பாப்பாவானது (pupils) மிகச் சிறிய ஒளிப் பட்டாலும், அது உட்செல்லுமாறு நன்றாக விரிவடையும் தன்மை வாய்ந்தது. ஏன் பூனைகள் மிக எளிதாகவும் இலகுவாகவும் இருளில் செல்லக் கூடுமென்பதற்கு மற்றொரு காரண மென்ன வெனில் அவைகளிடமுள்ள நுட்ப உணர்ச்சியையும் அறியக் கூடிய மீசைதான். ஒளிக் கிரணங்கள் அவைகளின் கருவிழியில் பட்டாலொழிய, பூனையின் கண்கள் இருளில் பிரகாசிப்பதில்லை. அவைகளின் கண்களிலுள்ள ஜவ்வு போன்ற பாகமானது உலோகத்தைப் போன்று ஒளியைப் பிரதி பலிக்குந்தன்மை வாய்ந்தது. பூனை, சிங்கம், புலி, சிறுத்தை, வேங்கை (Leopards, pumas, jaugars,) முதலிய பூனை இனத்தைச் சேர்ந்த மிருகங் களின் கண்கள் இத்தன்மை வாய்ந்தது.

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
182456

நமது சரடு

(கொத்து 32. மலர் 4, பக்கம் 102-ன் தொடர்ச்சி.)

அன்று கடைசியாக எல்லோரும் பாடசாலை வந்துசேர்ந்தோம். உடனே மழையும் 'சோ' வென்று பெய்ய ஆரம்பித்தது. இன்னும் எனது நண்பர் ராமத்தை அழிக்கவில்லை. அங்கு என்னை பார்ப்பதற்காக அயல் ஊரார் ஒருவர் காத்துக்கொண்டிருந்தார்போலும். அவருக்கு ஏறக்குறைய வயது நாற்பது ஆண்டுகள் இருக்கலாம். தலையில் உரோமம் நரைத்திருந்தது. மீசையைக் காணோம். முகச்சவரம் செய்திருந்தார்போலும். ஆனால் அதிகக் கெம்பீரமாகத் தோன்றினார். என்னைக்கண்டதும் சந்தோஷ முகத்துடன், "ஐயா வாருங்கள்......நீங்கள்தானே மிஸ்டர் 'கை' என்பவர்" என்று ஆத்திரத்துடன் கேட்டார். இவர் இவ்விதம் கேட்பதைக் கவனித்தால் எனக்கு பயமும் சந்தேகமும் உண்டானது. பரபரப்புடன் "ஆமாம் ஐயா...என்னவிசேஷம்... சீக்கிரம் சொல்லுங்கள்" என்று கேட்டேன். "நல்லது...உங்களைத்தான் தேடிவந்தேன். வீட்டிலே கேட்டேன். எங்கேயோ சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். நீவீர் எங்கெல்லாம் சுற்றித் திரிந்தாலும் கடைசியாக இங்கு வந்துதான் தீரவேண்டுமென்று இங்குக் காத்துக்கொண்டிருக்கின்றேன். ஆனால் விஷயமொன்றுமில்லை......" என்று சொன்னார். இதைக் கேட்டதும் எனக்குச் சந்தேகம் அதிகரித்தது. ஆயினும் இவருடைய கையில் ஓர் கிளிக்கூடு இருப்பதைக்கண்டு சந்தேகத்தை ஒருவாறு நீக்கினேன்.

"சரி...ஐயா நீவீர் என்னைத் தேடிவந்த காரணமென்ன? இது என்னக் கிளிக்கூடா...கிளிவளர்க்கின்றீரா?" வென்று கேட்டுக்கொண்டே கீழேகுனிந்து கிளிக்கூட்டைக் கவனித்தேன். அவரும் அதை எனக்குக் காண்பித்துக்கொண்டு..."ஐயா வேறு விஷயமொன்றுமில்லை...இதில் பாருங்கள் ஓர் பத்து ஈக்கள் வளர்க்கின்றேன். நிதம்நல்லதீனி போடுகின்றேன். நன்றாகத்தான் பேணி வருகின்றேன். ஆ...னால் ஓர் விஷயம். இதில் ஆண்கள் எவை... பெண்ஈக்கள் எவை...வகைக்கு எத்தனை என்று பார்க்கவேண்டி

யிருக்கின்றது. இது ஓர் பெரிய ஆசையாக இருக்கின்றது. இதனல் ரெம்ப...ரெம்ப உபாயமெல்லாம் செய்துவருகின்றேன். ஒன்றும் பிரயோஜனமே கிடையாது. அநேக பெரியோர்களிடமும் காட்டினேன். அவர்களும் என்னெல்லாமோ செய்தார்கள். எல்லாம் வீண்தான். ஆனல் நீவீர் எப்படியாவது இதைக்கண்டு பிடித்துவிடுவீர்களென்று சொன்னர்கள்...அதனல் உங்களைத் தேடிவந்தேன்...வேறுவிஷயம் என்னிடத்தில் என்ன? இதோ பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டு கூட்டைக்காட்டினர்.

பின்னர் எனக்குண்டான சந்தேகம் நீங்கியது. அதிக சந்தோஷத்துடன் "ஐயா...நல்லது" என்று சொல்லிக்கொண்டு அதை நன்ருகக் கவனித்தேன்...என்ன ஆச்சரியம்! என்ன விநோதம்! இதை சரடென்று நினைக்கவேண்டாம். உள்ளே பார்த்தேன். பத்து ஈக்கள் ஓர் குச்சியின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தன. ஆனல் அக்கூட்டில் தண்ணீர் ஊற்றிவைக்கவும் தீனிவைக்கவும் கிண்ணங்கள் கிடையாது. அதைக் காணும் அக்கிண்ணங்களை எங்கே என்று கேட்டபோது "இதோ இங்கு இருக்கின்றன" வென்று சட்டைப் பையிலிருந்து எடுத்துக் காட்டினர். பின்னும் "சரிஐயா...இவைகளுக்கு தீனி என்ன வைக்கின்றீர்கள்" என்று கேட்டேன். "ஐயா...சாதாரணமாக வெறும் இனிப்புப் பண்டங்கள்தான்......" என்ருர்.

எனக்கோ ஒன்றும் புலப்படவில்லை...சற்றுநேரம் யோசனை செய்துகொண்டு இருந்துவிட்டு "ரெம்ப...நல்லது...சற்று பொறுங்கள் மழை நின்றுவிட்டது...வீட்டிற்குச் சென்று ஓர் சாமான் எடுத்துக்கொண்டு வருகின்றேன்." "ஐயா...ஐயா அப்படியே இருந்திடாதிங்க...கட்டாயம் இதை பார்த்துதான் தீரவேண்டு" மென்று கேட்டார். "கண்டிப்பாக வருகின்றேன்... ஐந்து நிமிஷங்கள் பொறுங்கள்" என்று சொல்லிக்கொண்டு விரைவாக வீட்டிற்கு ஓடிவந்தேன். கொஞ்சம் சர்க்கரையும், ஓர் முகம் பார்க்கும் கண்ணடியையும் எடுத்துக்கொண்டு விரைந்துசென்றேன். "ஐயா உம்முடைய காரியம் சித்திபெறும். கூட்டை இப்படி எடுத்துக்கொண்டு வாருங்கள். மேஜையின்

மேல் வையுங்கள் ” என்றேன். அவரும் அதை மேஜையின்மேல் வைத்தார். “ ஈக்களை வெளியே கொண்டுவரவும், உள்ளே கொண்டுவிடவும் உம்மால் முடியுமா ? அவ்விதம் உமது ஈக்களை பழக்கி வைத்திருக்கின்றீரா ? ” “ ஆமாம்... ஐயா. ” “ சரி... கூட்டின் வாசற்படி எது...... ” என்று கேட்டுக்கொண்டு அதன்முன்னால் சர்க்கரையையும் முகக் கண்ணாடியையும் வைத்தேன். “ சரி... இப்போது உமது ஈக்களை வெளியே விடுங்கள். ” ஈக்கள் வெளியே கொண்டுவரப்பட்டன.

ஈக்கள் வெளிவந்ததும் நான்கு ஈக்கள் கண்ணாடியில் உட்கார்ந்தன. மீதி ஆறு ஈக்கள் சர்க்கரையில் உட்கார்ந்தன. என்னுடைய வேலை பலித்தது. கூட்டை இரண்டாகத் தடுத்தேன். “ ஐயா... இப்போது கவனியுங்கள். இந்தக் கண்ணாடியில் உட்கார்ந்துகொண்டு அழகு பார்த்த இந்த நான்கு ஈக்களும் பெண் ஈக்கள். இவைகளை ஓர் பக்கத்தில் விட்டுவிடுங்கள், பின்னர் அடுத்த அறையில், சர்க்கரையில் உட்கார்ந்து ஆகாரம் தேடிய மீதி ஆறு ஈக்கள் ஆண் ஈக்களை விட்டுவிடுங்கள். இவ்வளவுதானே. இதை பிரமாதமாகச் சொன்னீர்கள். பார்த்தீர்களா. எவ்வளவு சுளுவாக முடிந்தது இப்பெரும் காரியம். ” என்று எடுத்து நவின்றேன். ஆஹா... என்ன ஆச்சரியம். அவருக்குண்டான சந்தோஷத்திற்கு ஏதாவது அளவுண்டா ? வெகு அக்களிப்புடன் நான் சொன்னதுபோல் செய்துகொண்டார். “ உங்களுக்கு ரெம்ப வந்தனம்... உங்களுடைய யோசனையே யோசனை ரெம்ப நல்லது... நான் வருகின்றேன்... சலாம் ” என்று சொல்லிக்கொண்டு, புறப்பட்டார். மழை மறுபடியும் பெய்ய ஆரம்பித்தது. அவரும் மழைக்கு பயந்துகொண்டு அங்கேயே தங்கினார். நாங்களும் அவரை ஊருக்குப் போகவிடாமல் தாக்காட்டி வைத்தோம். அவருடன் சற்றுபேச ஆரம்பித்தோம்.

“ ஐயா... இந்த ஈக்களை எங்கே பிடித்தீர்கள்.. எவ்விதம் வளர்க்கின்றீர் ” என்று கேட்டோம். அவர் கதையை ஆரம்பித்தார். “ ஐயா... கேளுங்கள் இதன் கதையை... நான் ஒருநாள் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். கொஞ்சம் சோறு

கீழே சிந்திக்கிடந்தது. அதில் ஒரு சோற்றை இரண்டு ஈக்கள் வந்துத் தூக்கிக்கொண்டு சென்றன. இதை நான் பார்த்துக் கொண்டே இருந்து, அவைகளைப் பின்தொடர்ந்து சென்றேன். வீட்டில் ஒரு மூலையில் அவைகள் கூடுகட்டி இருந்தன. அக்கூட்டில் இந்த ஈக்கள் சோற்றை சேகரம் செய்தன. இதை தினமும் கவனித்துவந்தேன். காலையில் எழுந்தவுடன் இதுதான் எனக்கு வேலை. இவ்வீக்கள் நாளாவட்டத்தில் முட்டைகள் இட்டு குஞ்சுகள் பொரித்தன. இக்குஞ்சுகளை எடுத்து வளர்க்க எனக்கு ஆசை உண்டானது, ஆசையால் இவைகளை வளர்க்கின்றேன். இது ஓர் பெரிய விநோதமல்லவா......? அற்புதமல்லவா?" என்று எங்களிடம் சரடுவிட்டார்.

"ஆஹா...என்ன விந்தை...இதெல்லாம் உலகத்தின் அற்புதமல்லவா...? இவைகளை வளர்ப்பவர்களுக்கு என்ன பொறுமை! என்ன பிரயாசை! என்னகக்ஷ்டம்! இப்படியெல்லாம் இருப்பதால்தானே, உலகில் மற்றொரு பிரஸ்தாபம் உலாவி வருகின்றது. இனிமேல் பிறக்கும் குழந்தைகளுக்கு காதே மொத்தம் இருக்காது என்று சொல்லுகின்றார்கள். இதுவும் வெறும் சரடல்ல. உண்மையாகவே நடக்குமென்று நம்புகின்றேன்." என்று சொன்னேன். எல்லோருமே சிரித்தார்கள். அது எப்படி இருந்தாலும்சரி...நமக்கென்ன...

பின்னர் அந்த அயல்ஊர் ஆசாமியை ஓர் கதை சொல்லும்படி தொந்தரவுசெய்தோம். அவரும் எங்களுடைய தொந்தரவுகளைத் தாங்கமுடியாமல் ஓர் நேர்த்தியான கதை சொன்னார். அக்கதையை அடுத்த மலரில் காணலாம்.

(தொடரும்)

'கை' எழுதியது.

கிராமக் கல்விப் பிரசாரம்

(A. Antonimuthu.)

"என்ன சார், இந்த உலகம் போற போக்கு. நம் முன்னோர்களெல்லாம் முட்டாள்களா?...இந்தக்காலத்தில் யாரைத்தான் நம்பமுடிகிறது. சிறிது எழுதப்படிக்கத் தெரிந்தவர்களெல்லாம் தாங்களே சாஸ்திரிகளெனத் தலைதூக்கிப் பேச ஆரம்பித்துவிடுகின்றனர்..." என்று மூச்சுவிடாமல் பேசிமுடித்தார் மிஸ்டர் குழந்தைசாமி பிள்ளை.

"அப்படியானால் நான் சொல்வது பொய்யா, நீங்களே பாருங்களேன்; இந்த உலகம் மாறுவதுபோல் தற்கால ஆசிரியர்களும் மாறிவிட்டார்கள். திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் உதவாதாம், ஏட்டுப்படிப்பெல்லாம் இப்போது செல்லாதாம், கொயந்தைகளுக்குப் பயம் காட்டாமே படிச்சுக்கொடுக்கணுமாம், அநியாயம் சார்..." என்று உளறிக்கொட்டிவிட்டார் பிரகாச முதலியார்.

"அடாடா, ஏனிவ்வளவு ஆத்திரம், அதோ நமது உபாத்தியாயர் வருகிறாரே, அவரிடம் கேட்டால் என்ன பதில் சொல்கிறார் என்று பார்ப்போமே!" என்று சமாதானஞ்செய்தார் திரு. செங்கோல் உடையார்.

"வாருங்கோ வாத்தியாரே: வந்தனம், சரியான வேளையில் தான் நீரும் வந்தீர், இப்படி உட்காருங்கள். ஏன் சார், இந்த உலகம் மாறுவது போதாதா நீங்களுமா மாறவேண்டும்! நாகரீகம், நாகரீகம் என்று சொல்லி எங்கள் முன்னோருடைய பழக்க வழக்கங்களையெல்லாம் அழித்துவிடுகிறீர்கள், இதன் அர்த்தம் எனக்குப் புலப்படவில்லையே!" என்று ஒரு வீச்சு வீசினார் முதலியார்வாள்.

ஆசிரியர் :—முதலியார்வாள், கோபப்படவேண்டாம், ஒரு கேள்வி நான் உங்களைக் கேட்கலாமா?

முதலியார் :—ஆஹா, தடையென்ன?

ஆசிரி. :—தாங்கள் தயவுசெய்து கால்நடையாய் மதுரைமாநகர் சென்றுவரவேண்டும்.

முதலி. :—இதென்ன கேள்வி சார், இங்கிருந்து 60 மைல் தூரமுள்ள மதுரைமாநகர்க்கு இக்காலத்தில் அதுவும் கால்நடையாய் போய் வர யார் சம்மதிப்பார்? சிறிது பணச்செலவு செய்து புகைவண்டியிலாவது, மோட்டார் பஸ்ஸிலாவது போய் திரும்புகிறது.

ஆசிரி. :—என்? உங்கள் முன்னோர்கள் புகைவண்டியில் தான் பிரயாணம் செய்தார்களோ? இல்லையல்லவா? அப்படியானல் உங்கள் முன்னோரின் பழக்கவழக்கங்களை மாற்றுவது ஞாயமா என்பதுதான் என் கேள்வி?

பிள்ளைவாள் :—வாத்தியாரே, இக்கேள்விக்குப் பதில் சொல்வதுதானு பிரமாதம், அக்காலமா இக்காலம், காலத்திற்கேற்ற கோலம் போடவேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதா?

ஆசிரி. : சரியாய்ச் சொன்னீர் பிள்ளைவாள், காலத்திற்கேற்ற கோலம் போடவேண்டுமென்பதல்லவா உங்கள் பதில், வாஸ்தவம். அக்காலத்திற்கு அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு ஏற்றதுதான், ஆனல் இக்காலத்திற்கு அவைகள் அவ்வளவு பிரயோஜனப்பட மாட்டாதல்லவா? ஆகவேதான் இக்காலத்திற்குத் தகுந்ததுபோல் கல்விமுறைகளையும் மாற்றியமைக்கவேண்டியிருக்கிறது. மேலும் முற்காலத்தில் உயர்ந்த ஜாதியினரும், தனவந்தர்களும், குருமார்களுமே கல்வி பயின்றனர். கல்வி பயின்ற சொற்பப்பேரிலும் பெரும்பான்மையோர் கையெழுத்துப் போடக்கூடிய கல்வி அறிவு பெற்றவர்கள். சிறுபான்மையோர்தான் சிறிது எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருந்தனர், ஆதலால் அப்பண்டைய முறை அவர்களுக்கேற்றதாயிருந்தது.

நவீன நாகரீகம் மிகுந்த இந்தக்காலத்தில் பண்டைய முறைகள் மிகுந்த பயனைத் தரக்கூடியதன்று. "கல்வி இல்லா மனிதன் கால் மனிதன்" என்றழைக்கப்படும் இக்காலத்தில் தோட்டி முதல் தொண்டமான் வரையில் ஆண், பெண் அனைவரும் கல்வி கற்கவேண்டியவர்களாகின்றனர். ஏழை, பணக்காரர், ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி அனைவரும் தங்கள் சக்திக்கேற்ப கல்வியறிவு பெறுவதற்குத் தேவையான முறைகளைக் கையாளவேண்டியது கல்வி இலாக்கா அதிகாரிகளின் கடமையன்றோ? மேலும் தற்கால நாகரீகத்தில் வளரும் சிறுவர்கள், பண்டைய காலத்துச் சிறுவர்களைப்போல் அடிக்குப் பயந்து அடங்கி நடப்பவர்களல்ல, அவர்களை நம் கைவசப்படுத்த அன்பென்னும் முறையைக் கையாளுதல் வேண்டும். இந்தத் தத்துவத்தைத் தழுவித்தான் நவீனமுறை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவே பிள்ளைகளுக்கேற்ற முறையாம்.

முதலி. :—இம்முறையை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் சார், திண்ணைப் பள்ளிக்கூடத்தை ஏன் சார் எடுத்துவிட்டீர்கள்? கட்டிடமில்லாமல் நாங்களெல்லாம் உற்சாகமாய்ப் படிக்கவில்லையா?

ஆசிரி. :—கோவில், மடம், சாவடி திண்ணை முதலிய இடங்களில் பாடங்கள் நடத்துவதும் ஒரு பரம்பரை வழக்கந்தான். ஆனால் இது இக்காலத்துக்குப் பொருந்தாது. முற்காலக் கல்வி முறைக்கும், தற்காலக் கல்விமுறைக்கும் வித்தியாசங்கள் பல உள. முற்காலத்தில் மாணவர் குறைவு; திட்டமான கால அட்டவணை, பாடத்திட்டம் இல்லை. மேலும் பிறபாடசாலைகளுடன் ஒப்பிடும் தேர்ச்சி அவசியமில்லாதிருந்தது. ஆனால் இக்காலத்திலோ அந்நிலைகள் முழுதும் மாறிவிட்டன. மாணவர்களின் தொகை, வயது, வகுப்பு, கற்கும் விஷயங்கள் இவை பேதப்படுகின்றன. சிறுமியரும் சேர்ந்து படிக்கவேண்டியிருக்கிறது. ஆசிரியர் பலர் போதிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஆசிரியரும், பெருந்தொகைப்பட்ட மாணவரும் மழை வெயிலிலிருந்து தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய இயலாது. மாணவருடைய கவனமும் சிதறும். தற்கால கல்வி இலாகா விருப்பப்படி எல்லா ஜாதியினரும் திறந்த அக்ராகாரம், கோவில் இவற்றில் அமைந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்கு வர வசதியில்லாமற்போகிறது. ஆகவே மாணவர், ஆசிரியர் இவர்களின், வசதியையும், சுகாதாரத்தையும் கவனித்து, ஒரு பொருத்தமான கட்டிடம் வேண்டியிருக்கிறது.

பிள்ளை. :—ஆமாங்க சார் இதன் காரணத்தைக் கண்டுபிடியாமல்தான் தங்களிடம் இவ்வாறு முறையிட்டோம். எங்களுடைய சந்தேகத்தை நிவர்த்திசெய்ததற்கு மிகவும் நன்றியறிந்திருக்கிறோம். இனிமேல் எங்கள் பிள்ளைகளை தவறாமல் பள்ளிக்கனுப்பிவைக்கிறோம் ஐயா.

முதலி. :—உங்களிடம் சம்பாஷித்த சொற்ப நேரத்திற்குள் பல உண்மைகளை அறிந்துகொண்டோம். தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் பலவித விஷயங்களைக் கேட்டறிய ஆசிக்கிறோம்.

ஆசிரி. :—ஆஹா! அப்படியே செய்வோம். கிராமத்தாரே எனக்கு நேரமாகிறது, அடுத்தநாள் கூடுமானால் இங்கு வருகிறேன். வந்தனம், சென்றுவரலாமா?

எல்லோரும் :—நல்லது உபாத்தியாயரே, உங்களுக்கு மெத்த வந்தனம் போய்வாருங்கள்.

ஆசிரியைகளின் கடமை

Miss S. Dhanapackiam, H. M.
Pachaperumalpatti, (Via) Turaiyur.

பெண் கல்வியைப்பற்றி எத்தனையோ கல்வி அதிகாரிகளும், மேதாவிகளும், பெரியோர்களும் பல கூட்டங்களில் பேசியும் எழுதியும், அரை அங்குலம் முன்னுக்கு வந்துள்ளதா? சில ஆசிரியைகளின் கவலையீனத்தால் ஆரம்பப் பாடசாலைகள் மூடப் படுகின்றன. எங்கு திரும்பிப் பார்த்தாலும் படித்த ஆண்கள். படித்த பெண்கள் எங்கே? நம் பாரத அன்னை ஈன்ற அருந்தவப் புதல்விகளின் நிலையென்ன?

ஒரு சிறு கிராமத்தில் புதிதாகப் போதனாமுறை பயின்ற ஆசிரியைகளை நியமிக்கின்றனர். அந்த ஆசிரியை சினிமா **ஸ்டார்** போல நடையுடை யலங்காரத்துடன் இருந்து கிராம மாதர்களை நகையாடினால் எங்ஙனம் பெண் பாலர்களைப் பள்ளியில் சேர்க்க முடியும். நம்முடன் பிறந்த சகோதரிகளைப்போல கிராம மாதர் களை நேசித்துப் பெண் கல்வியின் அவசியத்தை நன்கு புகட்டி ஆவன செய்தால்தான் பள்ளிக்கூடமானது மாணவிகளால் விளங்கி காட்சியளிக்கும். சில ஆசிரியைகள் பிராக்ட்டிக்கல் டெஸ்ட் (Practical test) முடியும் வரை உற்சாகத்துடன் வேலை செய்து, பிறகு ஈ ஓட்டுகிறார்கள். இப்படிப்பட்ட ஆசிரியர் களின் மனதில் நம் நாடு, நம் பிள்ளைகள், நம் ஊர், நம் பள்ளி என்ற எண்ணம் உண்டாகுமானால் பள்ளியை மூட ஏதுவுண்டா? வீரம் குன்றா மானிடர்கள் தோன்றிய நாட்டில் நாமும் பிறந் தோம். கம்பரும், கவி காளமேகமும், இளங்கோ அடிகளும் தோன்றியுள்ளார். தமிழ் நாட்டில் காவியச் சித்திரங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வலையாபதி, குண் டல கேசி முதலியன தோன்றியுள்ளன. இத்தகைய தமிழ் நாட்டில் தமிழ் தாயின் எழிலையே கெடுக்குமாறு ஆசிரியைகள் கவலையில்லாமல் இருப்பது நன்றாகுமோ?

எதிர்காலத்தில் தமிழ் கலைகள் ஓங்குமாறு ஒவ்வொரு ஆசி ரியைகளும் தான் வசிக்கும் கிராமத்தைப் புனிதமாக்கவேண்டும். காந்தியடிகளும் கவியரசர் தாகூரும் சாந்திநிக்கேதனத்தையும் சேவா கிராமத்தையும் புனிதமாக்கவில்லையா? ஆண் சிங்கங்கள் பெண் கல்விக்குப் பாடுபடும்போது நாம் தூங்கலாமா? தூங்கும் ஆசிரியைகளைத் தட்டி எழுப்புங்கள். நகர ஆசிரியைகளுக்கு

எப்படியும் பிள்ளைகள் சேர்ந்துவிடுவார்கள். கிராம ஆசிரியைகள் காலை $6\frac{1}{2}$ மணிக்கு வந்து பகல் 12 மணிக்கு வீடு திரும்புவர். அதிகாலையில் ஆசிரியைகளைப் பள்ளி வாசலில் கண்டால்தான் மாணவிகள் வித்தியாக்கூடத்திற்கு வருகின்றனர். நகர ஆசிரியைகளைக் கிராமத்திற்கு மாற்றினால் உடனே இரண்டு, மூன்று மாத லீவு எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதனால் மாணவிகளின் அறிவு சூன்யமடைகின்றதே என்ற கவலை இருந்தால் இப்படி இருக்கமாட்டார்கள். யுத்த காலத்தில் ஆசிரியைகளின் குடும்பத்தைப் பராமரிக்கும் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தி அரசாங்கத்தின் குழந்தைகளுக்கு உலக அறிவையும், ஆத்ம ஞானத்தையும், கல்வியாகிய கண்ணையும் திறக்க முயல்வோமாக!

யோசனைக் கணக்கு

ஒரு நத்தை 15 அடி நீளமுள்ள கம்பத்தை, ஒரு நாளைக்கு 3 அடி ஏறி, 2 அடி வழுக்கி கீழ்வந்துவிடும் என்றால் அந்தக் கம்பத்தை எத்தனை நாளில் தாவும்?

ஒரு 'ஸினிமா' கொட்டகையில் விற்கப்படும் டிக்கெட்டுகளின்பேரில் 8 ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதாவது முதல் 'ப்ரைஸ்' விழுந்தவனுக்கு, விளம்பரம் செய்திருந்த தொகையில் பாதியும் அதோடு 8 அணவும் சேர்த்து கொடுக்கப்படும். இரண்டாவது "ப்ரைஸ்" விழுந்தவனுக்கு மீதியுள்ளதில் பாதியும் அதோடு 8 அணவும் சேர்த்துக் கொடுக்கப்படும். இவ்வாறே ஒவ்வொருவருக்கும் மீதியுள்ளதில் பாதியும் அதோடு 8 அணவும் சேர்த்துக் கொடுக்கப்படும். இப்படியாகக் கொடுத்து சரியாய்விட்டதென்றால் விளம்பரம் செய்த தொகை எவ்வளவு?

George Sydney.

ஒரு பின்னத்தின் பகுதியைத் தொகுதியுடன் சேர்த்து, தொகுதியைப் பகுதியிலிருந்து கழித்தால் பின்னம் $1\frac{7}{9}$ ஆகும். பின்னத்தின் பகுதியானது தொகுதியின் மூன்று மடங்கைக் காட்டிலும் 4 அதிகம் என்றால் பின்னத்தைக் கண்டுபிடி.

K. Srinivasan.

வேம்பும் அதன் பயனும்

G. Susaimarian, (Old student)

நம் தாய்நாட்டின்கண் உள்ள எல்லா மரங்களிலும் நமக்குச் சகல வழியிலேயும் உபயோகமான மரம் வேப்ப மரமாகும். அம்மரத்தின் உபயோகங்களாவன :

1. இம்மரத்தின் இலையை அம்மை கண்டவர் படுக்கையி விட்டாலும், புண்களில் அரைத்துப் பூசினும் வைசூரிக் கிருமிகள் இறந்துபோம்.

2. புஸ்தகங்கட்கு இடையே இவ்விலைகளை வைப்பின் புஸ்தகங்களைப் பூச்சி நாசஞ்செய்யா.

3. குழந்தைகள் பிறந்த வீட்டினுள் இவ்விலைகளைப் போடுவதனால் அங்குள்ள நச்சுக்காற்றிலுண்டாகும் வியாதி நீங்கும்.

4. வேம்பின் இளந் தளிரை உண்பதனால், வயிற்றுவலியும், பசியின்மையும் நீங்கும்.

5. காய்ந்த வேப்பிலைப் பொடியைத் தணலில் தூவின் கொசுக்கள் வரா.

6. இத்தழை பசுந்தாள் உரமாகிறது.

7. வேப்பம் இலையிலிருந்து சோப்புச் செய்யலாம்; இது தோலிற்கு மெதுவும், வனப்பும் கொடுக்கிறது.

8. இவ்விலையிலிருந்தும், பூவிலிருந்தும், பச்சடி, குழம்பு, துவையல் செய்து, நெய்யில் வதக்கி உணவோடு உண்ணலாம். இது வாயுவைக் கலைக்கும்.

9. இவ்வெண்ணெய், ஜன்னி, க்ஷயம், வாதம் நீக்கும்; நோய்கட்கு வெகு பிரயோஜனமானது.

10. இவ்வெண்ணெய் விளக்கு எரிக்கவும், பலகாரம் செய்யவும் உதவும்.

11. இவ்வெண்ணெயை மாட்டுக்குளம்பு புண்ணிலும், மற்றுமிடமுள்ள புண்ணிலும் போட சீக்கிரம் ஆறும்.

12. வேம்பின் கொட்டையிலிருந்து எண்ணெயும், பிண்ணாக்கும் கிடைக்கிறது. பிண்ணாக்கு எருவிற்கு உபயோகப்படுகிறது.

சிறுவர் பகுதி

(A. Asirvadam)

நரியின் தந்திரம்

ஓர் குடியானவன், டாமி என்ற நாயை வெகு அன்பாய் வளர்த்துவந்தான். அந்நாயும் அவனிடத்தில் அன்பு பாராட்டி வந்தது. கொஞ்சகாலம் கழிந்து வயதாகி கிழட்டு நாயாகி விட்டது.

ஓர் நாள், குடியானவனும் தன் மனைவியும் இந்நாயின் கதியைப்பற்றியும், அதன் முதிர்ந்த வயதைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது குடியானவன், "பெண்ணே! இந் நாயை நாளையதினம் விரட்டி ஓட்டிவிடவேண்டும், இதனால் நமக் கொரு பிரயோஜனமுமில்லை" என்றான். மனைவி, "நாதா! 'கவை இருக்குமட்டும் காலைப்பிடிப்பார்கள் கவை தப்பினால் எட்டி கழுத் தைப் பிடிப்பார்களாம்' அத்தகைமைபோல் நீரும் சொல்லுகின் றீர் இது சரியில்லை" என்றாள்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கிழட்டு நாய் சரி, நம் கதி இவ்வாறாயிற்று, நாளையதினம் அவன் அடித்துத் துரத்துமுன் காடுபோய் சேர்வோம் என்று காடு ஏகிவிட்டது. அங்கு விசனத்தோடு ஓர் மரத்தினடியில் படுத்திருந்தது. இதைப் பார்த்த நரி, முன்பின் பார்த்தறிந்ததுபோல், "நண்பா, ஏன் நீ இங்கு இருக்கின்றாய், உனக்கு நேர்ந்ததைச் சொல்" என்றது. கிழட்டு நாய், தனக்கு நடந்ததைச் சொல்ல, "நாளையதினம் உன் குடியானவனும் அவன் பெண்ஜாதியும் புல் அறுக்க இக்காட்டுக்கு வருவார்கள், அப்போது குழந்தையும் இங்கு கொண்டுவந்து தொட்டில்கட்டி விட்டுவிட்டு தங்கள் வேலையைத் துவக்குவார் கள், அச்சமயம் நான் ஓடிவந்து குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறேன், உடனே உண்மையான ஊழியனைப்போல் என்னைத் துரத்தி குழந்தையைக் கொண்டுவந்து உன் எஜமானனிடம் சேர், அப்போது உன்னை தன் ஜீவியகாலத்துக்கும் மறக்கமாட்டான், ஆகையால் இதுவே நல்ல உபாயம்" என்று நரி சொல்லிற்று. நாயும் சம்மதித்தது. மறுநாள் காலையில் அவர்கள் வழக்கமாய் காட் டுக்கு வர, நரி சொன்னதுபோல் நாயும் செய்தது. அப்போது தான் எஜமான், நோக்குங்காலத்து அவனுக்கே மன ஆசையாய் நாயைத் தட்டி, தன் குழந்தையைக் காப்பாற்றினதற்காக உன்னை

மறவேன் என்று அதை அன்புடன் ஆதரித்தான். அன்றுமுதல் நாயும் சந்தோஷமாய் ஜீவித்தது.

ஆகையால் நாமும் நல்ல எண்ணத்தோடு பிறர் வாழ வேண்டும் என்ற எண்ணம் இருக்கவேண்டும்.

யோசனைக் கணக்கு விடைகள்

(கொத்து 32, மலர் 4, பக்கம் 119.)

முத்துமாலையின் விலையின் மதிப்பு ரூ. **377**.

முதல் மந்திரியின் சம்பளம் ரூ.				120
2-வது	,,	,,	,,	90
3-வது	,,	,,	,,	80
4-வது	,,	,,	,,	75
5-வது	,,	,,	,,	72.

ஷை விடையளித்தவர்கள் :—

1. C. George Sydney.
2. S. Arokiasamy, Teacher, Labour School, Kannagudy, Pullanbody P. O. (Lalgudy).
3. S. Arunachala pandaram, Teacher, Labour School, Keelaveliyur, Kulitalai.

விடை கண்டுபிடிக்கும் வழி

$\frac{1}{2}$, $\frac{1}{3}$, $\frac{1}{4}$, $\frac{1}{5}$, $\frac{1}{6}$ இவைகளின் அ. பொ. ம. $= 60$. இதை எடுத்துக்கொண்டால் பின்னம் வரும் ஆகையால் இதன் மடங்காகிய 120-ஐ முதல் மந்திரியின் சம்பளமாக எடுத்துக்கொள்வோம். இதன்படி கணக்கிடும்பொழுது 60 ரூபாய் நீக்கமாகும். 2-வது மந்திரிக்குக் கணக்கிடும்பொழுது இவ்வறுபது ரூபாயும் சேரும் ; ஆனல் அதற்குப் பதிலாக அவன் சம்பளத்தில் $\frac{2}{3}$ பாகம் நீக்கப்படும். ஆகையால் $\frac{2}{3}$ பாகம் $= 60$. $\therefore$ முழுபாகம் அல்லது 2-வது மந்திரியின் சம்பளம் ரூ. $\frac{\overset{30}{\cancel{60}}}{} \times \frac{3}{\cancel{2}} = 90$ ரூ. இதே போல மூன்றாவது மந்திரிக்கு $\frac{3}{4}$ பாகம் கழிவாகிறது. ஆகையால் அவன் சம்பளம் $= \frac{\overset{20}{\cancel{60}}}{} \times \frac{4}{\cancel{3}} = 80$ ரூ. இவ்விதமே நான்கு, ஐந்தாவது மந்திரிகளுக்கு $\frac{4}{5}$, $\frac{5}{6}$-க்கொண்டு கணிக்கவேண்டியது.

பெற்ளுேர் சங்க ஆண்டு விழாக்கள்

முசிரி தாலூகா, ஸ்ரீனிவாசநல்லூர் லேபர் பாடசாலையின் பெற்றோர் சங்க ஆண்டு விழா

(V. நடேசன், காரியதரிசி)

26—10—41-ல் மாயனூர் தொழிற்பாடசாலைத் தலைவர் ஸ்ரீ S. சாம்பசிவம் ஐயர் (B.A.) அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஷை தாலூகா ரேஞ்சு டெப்யூடி இன்ஸ்பெக்டர் திரு. K. பழனிஸ்வாமி (B.A., L.T.) அவர்களும் ஏனைய கனதனவான்களும் பிரசன்னமாயிருந்தனர்.

சிறுவர்கள் தங்களது இனிய ஆடல்பாடல்களால் தலைவர்களை வரவேற்க, ஷை பாடசாலை உபாத்தியாயினி, ஸ்ரீமதி D. எலிஸெபெத் பத்மாவதி அவர்கள் "பெண்கல்வியும் குழந்தைகளின் வளர்ப்பும்" என்ற விஷயத்தைப்பற்றியும், ஷை பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ V. நடேசன் அவர்கள் "சுகாதாரமும் குழந்தைகளின் க்ஷேமமும்" என்ற விஷயத்தைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், டெப்யூடி இன்ஸ்பெக்டரவர்கள் "பெற்ளுேர் கடமையும், கல்வியின் அவசியமும்" என்ற பொருளைப்பற்றி அரியதோர் பிரசங்கமாரி பொழிந்தனர். அப்பால், ஷை பாடசாலை மாணவர்கள் "குலசேகர பாண்டியன்" எனும் நாடகத்தைத் திறமையாய் நடத்திக் காட்டியபின் சபாநாயகரவர்களால் திறமை பெற்ற பிள்ளைகளுக்குப் பரிசுகள் ஏற்றவிதமாய் வழங்கப்பட்டன. இறுதியில் தலைவர் அவர்கள், பெற்றோரது கடமைகளைப்பற்றி வெகு உருக்கமாய்ப் பேசி முடிக்க, அன்னவர்க்கு நன்றி கூறப்பட்டு, அனைவர்க்கும் சிற்றுண்டி வந்தனோபசாரங்களுடன் ஷை விழா இனிது நிறைவெய்தியது.

திருச்சி தாலூகா, மேளகுபாறை லேபர் பாடசாலையின் பெற்றோர் சங்கக் கூட்டம்

(G. R. லாரென்ஸ், காரியதரிசி.)

20–9–41-ல் ஷை சங்கக்கூட்டம் ஷை ஊர் நாட்டாண்மை திரு. சிங்காரம்பிள்ளை அவர்களது தலைமையின்கீழ் கூடியது. தலை

வர் அவர்களை ஆடல்பாடல்கள்மூலம் வரவேற்கவே, அன்னவரும் அவ்வூரில் ஷ பாடசாலை சென்ற 6 வருஷகாலமாய், மிகத் திறமையாய் வேலைசெய்து வருவதைப்பற்றி மெச்சிப்பேசி, பெற்ரேர் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காய் அனுப்பிவர வேண்டிய அவசியத்தைப்பற்றி வற்புறுத்தினர்.

பின்னர் ஷ சங்கக் காரியதரிசி திரு. G. R. லாரென்ஸ். அவர்கள் ".கல்வியின் சிறப்பு" என்ற விஷயத்தைப்பற்றி இனியதோர் சொற்பொழிவாற்றவே, தலைவர்க்கு நன்றிகூறியதுடன், சங்கக்கூட்டம் கலைந்தது.

St. Joseph's Elementary School,
Pothamettupatty, near Manapparai.

ஷ பாடசாலையின் புதுக்கட்டிட அபிஷேகமும், பெற்ரேர் சங்கத் திறப்புவிழாவும்:—(K. R. சவரிமுத்து.)

26—10—1941-ல் ஷ பாடசாலையின் புதுக்கட்டிடம் ஷ பாடசாலை மானேஜர் சங். I அருளானந்தம் ஸ்வாமியார் அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டும், அன்னவரது தலைமையின்கீழ் **பெற்ரேர் சங்கம்** ஆரம்பிக்கப்பட்டும், விமரிசையாக விழாக்கள் நடைபெற்றன. சிறுவர்கள் பற்பல இனிய கீதங்கள் பாடி மகிழ்வித்தனர்.

அவ்வமயம் ஷ பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. A. அருளானந்தம் அவர்கள் "பெற்ரேரும், பாடசாலையும்" என்ற விஷயமாயும், உதவியாசிரியர் திரு. K. R. சவரிமுத்து அவர்கள், "பெண் கல்வி" யின் அவசியத்தைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

கடைசியில் தலைவர் ஸ்வாமியார் அவர்கள் "பெற்ரேரின் கடமைகளும் புதுப்பாடசாலையின் அபிவிருத்தியும்" என்ற விஷயமாய் அழகியதோர் பிரசங்கம் புரிய, அன்னவர்க்கு நன்றி கூறியும் அனைவர்க்கும் வந்தனோபசாரங்கள் செய்தும் விழா இனிது நிறைவெய்தியது. சிறுவர்கட்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

செயின்ற் சேவியர் ஆரம்பப்பாடசாலை, வல்லம்; தஞ்சை, "ஆண்டு விழாவும், பெற்றோர் தினமும்"

(V. ஜேசுதாசன்)

5–10–'41-ல் ஷை விழா தஞ்சை "கல்வித்தலைவர் (D. E. O. திரு. T. V. அப்பர் சுந்தரம், M. A., M. E. D. (Leeds) அவர்களது தலைமையின்கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமயம், தஞ்சை ரேஞ்சு டெப்யூடி இன்ஸ்பெக்டர் திரு. வெங்கட்டராமய்யர் (B. A., L. T.) அவர்கள் "பெற்றோரின் கடமைகளும், கல்வியும்" என்பதைப்பற்றி இனியதோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் தலைவரவர்களின் தேவியார் ஸ்ரீமதி. தேவகி அம்மையார், திறமையாக வேலைசெய்த மாணவர்கட்கு பரிசுகள் வழங்கினர். ஆடல்பாடல்களிலும், நடன நாடகங்களிலும், படிப்பிலும் சிறந்துவிளங்கின சிறுவர்கட்கு, அவ்வூர் கனவான்களால் பரிசுகள் அளிக்கப்பட்டன.

இறுதியாகத் தலைவர், அப்பாடசாலை வெகு திறமையாய் வேலைசெய்துவருவதைப் புகழ்ந்தும், அன்றைய வைபவத்திற்கு நூற்றுக்கணக்கானபேர்கள் விஜயம்செய்து மகிழ்ந்ததே அப்பாடசாலையின் பெருமையைக் காட்டுகிறதென்றும், அதை நடத்தும் மானேஜர் ஸ்வாமிகளின் அயரா உழைப்பு மிகவும் போற்றத்தக்கதென்றும் கூறித் தமது அரிய பிரசங்கத்தை முடிக்கவே அப்பாடசாலைத் தலைவர் A. அற்புதம் அப்பாஜி அவர்களால் தலைவர்க்கும் ஏனையோர்க்கும் நன்றிகூறியதோடு ஷை வைபவம் இனிது முடிவெய்தியது.

இதோ! இந்தப் பனைமரத்தை என் முப்பாட்டனார் குழந்தையாயிருக்கும்போது நட்டாராம்!

"சே" இருக்கவே முடியாது. இவ்வளவு பெரிய மரத்தை ஒரு குழந்தை எப்படி நட்டிருக்க முடியும்?

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

பாடசாலை தின வைபவங்கள்

10–10–'41 கல்வி கண்காட்சி திறப்பு விழா—காலை **10** மணிக்கு ஷை கண்காட்சி ராவ்பகதூர் திரு. S. ராயலுஸாமி பிள்ளை (மாஜி ஜெயில் சூப்பிரெண்டெண்ட்) அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. ஷை காட்சிப்பொருள்களின் வகை, தொகை நேர்மைகளைப்பற்றிப் புகழ்ந்து பேசிய அன்னவர்க்கு நன்றி கூறப்பட்டது.

மாலை **2-30**-க்கு இப்பாடசாலை மானேஜரும், தலைமை ஆசிரியருமாகும் **சங். A. லூர்துஸ்வாமி** B.A., L.T. அவர்களை இப்பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் ஏனையோரும் வெகு குதூகுலத்துடன் வரவேற்று, உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தும் பற்பல ஆடல்பாடல்களையும் நடத்தி மகிழ்வித்தும் அன்னவரது ஆசியையும் வாழ்த்துதலையும் அடையப் பெற்றனர். பின்னர், இப்பாடசாலை ஆசிரியர்களால் அன்னவர்க்குச் சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது.

11–10–'41 இன்று காலை பந்தய விளையாட்டுகள் (Athletic Sports) திரு. V. D. பிச்சைப்பிள்ளை B.A., L.T. (Jr. Dep. Inspector of Schools) அவர்களது தலைமையின்கீழ் வெகு உற்சாகத்துடன் நடந்தேறியது.

பின்னர், ஆசிரியர்கட்கும், மாதிரிப்பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சங். தலைமை ஆசிரியரவர்களால் சிற்றுண்டி விருந்து விமரிசையுடன் அளிக்கப்பட்டது.

மாலை **3-30**-க்கு, **பரிசளிப்பு வைபவம்,** திருச்சி மேற்றிராணியார் மிகவும் வந்திக்கத்தக்க James Mendonça, D. D. ஆண்டவர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம், கல்வித்தேர்ச்சி, நடத்தை, ஸர்க்கார் பரீட்சைகளில் முதன்மை மார்க்கு பெற்றமை, பந்தய விளையாட்டுகள் முதலிய காரியங்களில் திறமைபெற்றவர்க்கு ஆண்டவர் அவர்களால் அததற்கு ஏற்ற பரிசுகள், பதக்கங்கள், பொருட்கள் முதலியன வழங்கப்பட்டன.

மாலை 6 மணிக்கு "இருட்டறையின் இறைவன்" எனும் ஓர் இனிய நாடகம் ஆண்டவர் அவர்களின் தலைமையின்கீழ் இப் பாடசாலை மாணவர்களால் நடத்திக் காட்டப்பட்டது.

ஷை நாடகத்தைக் கண்டுகளிக்க நமது சபாமண்டபமும் பற்றாதெனும்படி ஏராளமாய்க் குழுமியிருந்த கனதனவான்களுக்கும் ஏனையோருக்கும் சபாநாயகராய் வீற்றிருந்து கௌரவித்த ஆண்டவர் அவர்களுக்கும், சங். தலைமை ஆசிரியரவர்கள் தமது மனமார்ந்த நன்றியைக் கூறினதுடன் ஷை வைபவங்கள் இனிது நிறைவெய்தின.

பெற்றோர் சங்கக் கூட்டத்தில் ஓர் பாட்டு

(S. அந்தோனி உபாத்தியாயர், அரியூர்)

"ஐயா சிறுவன் ஏழை என்மேல் மனமிரங்காதா" என்ற மெட்டு.

பல்லவி

ஐயா அருமைப் பெற்றோர்களே அறியக்கூடாதா?
அந்தோ உங்கள் மக்களைப்பள்ளி அனுப்பக்கூடாதா?
கல்வி அறிவு வாராதா?

சரணங்கள்

1. ஆறுவயது ஆகாப் பிள்ளை அப்பன்மார்களே?
(ஆறுவயது ஆனபிள்ளை அப்பன்மார்களே)
அற்பவேலை செய்யாப்பிள்ளை அன்னைமார்களே?
வீணாக வீதியிலே ஓடுகின்றாரே
வீணருடன் (வம்பருடன்) கூடிவிளை யாடுகின்றாரே
வீம்பு பேசுகின்றாரே......(ஐயா.)

2. பகுத்தறிவு இல்லா பல பிராணிகளல் லோ,
பாழ்வயிற்றைக் காக்கமட்டும் (நித்தம்) பார்க்கின்றனல்லோ
பகுத்தறிவு உள்ள நாமும் பகலிரவுமே,
பாழ்வயிற்றைக்காக்க மட்டும் பார்த்தால் போதுமோ?
[illegible] அறிவு வேண்டாமோ?......(ஐயா.)

தமிழ்நாடு ... சென்னை 600 008
182456

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு எற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்ணாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு... 0—6—0
4. கர்ணாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்ணாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.,
OOTACAMUND.

OUR EMPLOYMENT BUREAU

for

Managers of Schools in need of Trained Teachers	Trained Teachers in need of Employment

The following Managers are in need of trained teachers in their Schools. Applications may be sent direct to their Addresses.

கீழ்கண்ட மானேஜர்களுக்குப் போதனாமுறை பயின்ற உபாத்திமார்கள் தேவை. வேலையில்லாத உபாத்திமார் அன்னவர்களுக்கு நேராகவே மனுக்கள் சமர்ப்பித்துக்கொள்ளக் கடவர்.

Secondary Trained Teachers :

1. The Manager, R. C. School, Valipaleam P. O., (Via) Erode and Satyamangalam, Coimbatore Dt.
2. The Manager, Sri Gopalakrishna Aided Ely. School, Muniappan Koil St., Shevapet, Salem.
3. The Parish Priest, Catholic Church, Jalarpet, North Arcot Dt.
4. The Headmaster, St. Joseph's Sec. School, Cuddalore N. T., South Arcot.
5. The Parish Priest, Catholic Church, Pollachi, Coimbatore Dt.
6. The Manager, R. C. School, Sivaganga, Ramnad Dt.

Higher Elementary Trained Teachers :

1. The Manager, R. C. School, Ammapet, Tanjore Dt.
2. The Manager, R. C. School, Thondamanthurai, Vengalam P. O., (Via) Perambalur, Trichy Dt.
3. The Manager, Aided Boys' School, Kariapatti P. O., Ramnad Dt.

Wanted a Higher Grade mistress on Rs. 14/- per mensem for G. A. Reddiar's Girls' School, Kariapatti P. O., Ramnad Dt. *Apply to the Manager.*

Wanted a Higher Grade teacher on Rs. 15/- per mensem for a new Panchayat School to be opened at Mathagiri Pudur. *Apply to the Deputy Inspector of Schools, Kulitalai Range, Kulitalai, Trichy Dt.*

Reg. No. M. 1354.

போதன விஷய பூங்கொத்து
காரியாலயம்

பழைய சஞ்சிகைகள்

பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்றுகச்சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும்வண்ணம் புத்தகமாக பைபிண்டிங் செய்து அநேகர் வைத்துக்கொள்ளுகிறார்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு ஒன்றரை அணு வீதம் அனுப்ப வேண்டும். எங்களிடம் எல்லாப் பிரதிகளும் அகப்படா. வேண்டிய பத்திரிகைக்ளின் எண்ணைக்குறித்து அனுப்பினல் தேடிப்பார்த்துக் கிடைத்தால் அனுப்புவோம்.

சந்தா நேயர்கள்

பூங்கொத்து காரியாலயத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் முழு விலாசத்தையும், சந்தா எண்ணையும் தெளிவாகக் கூபனில் எழுதினல் நலமாக இருக்கும். அவ்வாறு எழுதாமையால் பலவித அசௌகரியங்கள் நேர்கின்றன.

விலாச மாறுதல்கள்

சந்தா நேயரில் சிலர் தங்கள் விலாச மாறுதலை முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். விலாச மாறுதலை 10-ம் தேதிக்குள் தெரிவிப்பது நலம்.

பத்திராதிபர்.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.